# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 11 செவ்வாய்க்கிழமை (24.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 126

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## நோர்வேத் தூதுவர் பிரட்ஸ்கரின் கிளிநொச்சிப் பயணம் இரத்து

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரின் கிளிநொச்சிப் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பயணம் இரத்துச் செய்யப்பட்ட தகவல் நேற்று முன்தினமிரவு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நோர்வேத் தூதரகத்தால் அறிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

வன்னிக்கான பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று அரசாங்கத்தரல் அளிக்கப்பட்ட ஆலோசனையை அடுத்து இந்தப் பயணம் இரத்துச் செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமாதானப் பேச்சுக்களை தொடர வேண் டும் எனின் போர்நிறுத்தத்தை நடை (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலில் புலிகளின் பெயர் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பெயர் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஜேர்மன் லக்ஸம்பேர்க்கில் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார அமைச்சர்கள் கூடிய கூட்டத்திலேயே இம்முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட 29 அமைப்புகள் பயங்கரவாதப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (04 ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடித் தொழில் இன்மையால் யாழ்ப்பாண மீனவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாக் கடற்கரையோரப் பகுதியில் மீனவர்கள் தொழிலினை மேற்கொள்ள 6 ஆவது நாளாகவும் தடைவிதிக்கப்பட்டுள்ளதால் 2 ஆயிரத்துக்கும் அதிகமான மீனவக்குடும்பங்கள் வருமானமின்றி பல்வேறு நெருக்குவாரங்களை எதிர்நோக்குவதாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் என்.தவரட்ணம் கவலை தெரிவித்துள்ளார்.

கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், கோயிலாக்கண்டி ஆகிய பகுதி மீனவர் குடாக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்தனர். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் குடாநாட்டுக் கடற்பரப்பில் ஏற்பட்ட மோதல் சம்பவங்களையடுத்து மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் குறுகிய (04 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியா ஆயுதம் வழங்கக் கூடாது

## கலைஞர் கருணாநிதி சட்டசபையில் உரை

(சென்னை)



தமிழர்களை வதைக்க இலங்கையில் உள்ள சிங்கள இராணுவத்தினருக்கு மத்திய அரசு ஆயுதம் வழங்கி உதவிடக் கூடாது. தமிழர்களை வதைப்பதற்காக அது பயன்படும். ஆகவே அந்தச் செயலைக் கண்டிப்பாக நிறுத்துங்கள் என்று கேட்டுக்கொள்கின்ற உரிமை எமக்கு இருக்கின்றது. பொறுப்பும் எமக்கு இருக்கின்றது என்று தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டு சட்டசபையில் இது தொடர்பாக நடந்த விவாதத்தில் அவர் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் இன்றுமுதல் தொடர் வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

மூன்று அம்சக் கோரிக்கையை முன்வைத்து பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று முதல் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

❖ புதியசம்பளத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்ட நிலையிலும் நடைமுறைப்படுத்தப்படாது உள்ளமை.

❖ மாதாந்த இழப்பீடு நிலுவையை புதிய ஊழியர்களுக்கு வழங்கல்.

❖ சம்பள முரண்பாடுகள் களையப்பட வேண்டும்.

போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதாக யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்று முதல் நாடு முழுவதிலுமுள்ள (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் தற்கொலை வெடிகுண்டு அங்கிகளுடன் ஆயிரத்துக்கும் அதிகமான போராளிகள்

### புலிகளின் குரல் பொறுப்பாளர் உரை

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்தில் ஆயிரத்திற்கும் அதிகமான போராளிகள் வெடிகுண்டு அங்கியுடன் ஊடுருவியுள்ளனர். இப்போராளிகள் சோதனையிடப்பட்டால் எதிரியையும் அழித்து தம்மையும் அழிக்கும் புதிய உத்தியை அவர்கள் அறிமுகப்படுத்தி வருவதாகத் தமிழீழ விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான புலிகளின் குரலின் பொறுப்பாளர் நா.தமிழன்பன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தற்காப்பு வெடிகுண்டு அங்கியை வெடிக்கவைத்து சாவைத் தழுவி கொண்டவர்களின் வணக்க நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, பெரும்பாலான கரும்புலிகள் வெடிகுண்டு அங்கியை அணிந்து கொண்டு எதிரியின் இலக்குக்காக காவல் இருப்பார்கள். அவர்கள் ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் அல்ல. பல ஆண்டுகளுக்கும் காவல் இருந்து அந்த இலக்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி முன்னரங்குப் பகுதியில் பெருமளவான இராணுவத்தினர் குவிப்பு

### தமிழ்நெற் செய்தி வெளியீடு

(கொழும்பு)

தென்மராட்சிப் பாதுகாப்பு முன்னரங்கை நோக்கி இராணுவத்தின் விசேட அதிரடிப் படையினர் பாரிய படைக்குவிப்பை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

சுமார் 2 ஆயிரம் படையினரை அடங்கிய அதிரடிப் படையினர் கடந்த ஞாயிறன்று தென்மராட்சிப் பாதுகாப்பு முன்னரங்கில் குவிக்கப்பட்டுள்ளதாகத் தமிழ்நெற் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த மூன்று தினங்களாக பாதுகாப்புப் படையினர் அதியுயர் பாதுகாப்பு வலயம் பகுதியில் இரவு நேரத்தில் பாதுகாப்புப்பயிற்சிகளில் ஈடுபட்டதாகவும் தமிழ்நெற் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

தென்மராட்சி, மந்துவில், சரசாலை காவலரண்களிலிருந்து பாதுகாப்புப்படையினர் ஆட்லறி, மோட்டார் தாக்குதல் பயிற்சிகளிலும் ஈடுபடுவதாக அச் செய்தி தெரிவித்துள்ளது. (சு)

## குரோசிய நாட்டிற்கு ரணில் பயணம்

(கொழும்பு)

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குரோசிய நாட்டுக்கான பயணத்தை இன்று மேற்கொள்ளவுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. குரோசியாவுக்குச் செல்லும் அவர்அங்கு அனைத்துலக ஜனநாயக அமைப்பைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை பூட்டானிலிருந்து இலங்கை திரும்பிய ரணில் ஒருவாரத்திற்கு நாட்டில் இருக்க மாட்டார் எனக் கூறப்படுகின்றது. (சு)

## போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகி போர்ப் பிரகடனம் செய்ய அரசு முயற்சி

### ஆய்வாளரை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகி முழு அளவில் போர்ப் பிரகடனம் செய்ய அரசாங்கம் விரும்புவதே உண்மை நிலைப்பாடு என்று கொழும்பு இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளதாகக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேசத்தின் முழு ஆதரவுடனும் நோர்வேயின் அனுசரணையுடனும் தொடங்கப்பட்ட சமாதான முயற்சியின் அடித்தளமே இந்தப் போர்நிறுத்த உடன்பாடுதான். விடுதலைப்புலிகளின் பலத்தின் அடிப்படையிலேயே இந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது.

ஆனால் விடுதலைப்புலிகள் இன்று பலமிழந்து விட்டதாகக் கருதும் அரசாங்கம், இந்த உடன்பாடானது படையினரின் நடவடிக்கைகளுக்கு மிகப் பெரும் தடையாக இருக்குமெனக் கருதுகின்றது.

ஆனாலும் இந்த உடன்பாட்டிலிருந்து ஒரு தலைப்பட்சமாகத் தான் விலகிவிடுவதை அரசாங்கம் (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

ICC Cricket World Cup

## அரையிறுதிப் போட்டியில் இன்று இலங்கை-நியூசிலாந்து மோதுகின்றன

(ஜமேக்கா)

நியூசிலாந்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் இலங்கை அணி நுழையுமா? என்ற ஏக்கம் ரசிகர்களிடையே ஏற்பட்டுள்ளது. மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வரும் ஒன்பதாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இன்று நடைபெறும் அரையிறுதிப் போட்டியில் இலங்கை-நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

தொடர்ந்து நடைபெற்ற சூப்பர் 8 ஆட்டத்துடன் மேற்கிந்திய தீவுகள், இலங்கிலாந்து, அயர்லாந்து, பங்களாதேஷ், அணிகள் வெளியேறின. தற்போது இலங்கை, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளன.

இன்று நடைபெறும் போட்டியில் இலங்கை-நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. நியூசிலாந்தை சூப்பர் 8 ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றது. இலங்கை அணியைப் பொறுத்தவரை துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு என அனைத்திலும் இத் தொடரில் சிறப்பாகச் செயற்பட்டு வெற்றியை பெற்றுள்ளது.

அதிரடி வீரர் சனத்ஜெயசூரியா , அணித்தலைவர் மகேல ஜயவர்த்தனா, விக்கெட் காப்பாளர் சங்கக்கார, திலகரத்தின, டில்சான் ,சாமர சில்வா மற்றும் உப்பில்தரங்க என ஆறு துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட கூட்டணியுள்ளமை பலம் பெற்றுள்ளது.

பந்து வீச்சில் சமிந்தவாஸ், நம்பிக்கை நட்சத்திரம் முரளிதரன், டில்கார பெர்னாண்டோ, மலிங்க, ஜெயசூரியா என ஐந்து பந்து வீச்சாளர்களை கொண்ட அமைந்த கூட்டணியுள்ளது.

களத்தடுப்பில் வீரர்கள் அனைவரும் அண்மைக்காலத்தில் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் சனத் ஜயசூரியா எவ்வாறு அணிக்கு உதவினாரோ அவ்வாறு இப்போது அவரின் அதிரடித்துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு தேவைப்படுகின்றது.

தற்போது இலங்கை இறுதிப் போட்டிக்குள் நுழைந்து விடவேண்டுமென்று இலக்குடன் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இதே வேளை நியூசிலாந்து அணியும் இத் தொடரில் சிறப்பாக ஆடிவருகிறது. அவ் அணியில் துடுப்பாட்டக்கூட்டணிகளாக அணித் தலைவர் பிளமிங், மக்மிலன்ட், மைக்குலம், சகல துறை ஆட்டக்காரர் சைரிஸ் மற்றும் புல்ட்டன் ஆகியோர் சிறப்பாகச் செயற்படுகின்றனர்.

இலங்கை-நியூசிலாந்து அணிகளும் ஒரே பலத்திலிருப்பதால் இப் போட்டி மிகவும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனாலும் இது வரையில் நியூசிலாந்து அணி உலகக்கிண்ணத்தொடரில் இறுதிப் போட்டிக்கு முன்னேற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)


### குறுகியகால வைப்புக்களுக்கு மக்கள் வங்கி வழங்கும் விசேட வட்டிவீதம்

மக்கள் வங்கியில் ரூபா 10இலட்சத்துக்கு மேற்பட்ட தொகையினை ஒரு மாதத்திற்கு வைப்பிலிடுபவர்களுக்கு 18 % வட்டியும், ரூபா 100 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையினை ஒரு மாதத்திற்கு வைப்பிலிடுபவர்களுக்கு 20% வட்டியும் விசேட வட்டியாக வழங்கப்படவுள்ளது. இ[illegible]லுகை 19.04.2007 இலிருந்து 30.04.2007 வரை மட்டுமே...

மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கியிடமிருந்து


## சீமெந்தின் விலையேற்றத்தால் அபிவிருத்திப் பணிகள் பாதிப்பு

### மாநகர ஆணையாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிற்கு கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட சீமெந்து மற்றும் கட்டடப் பொருட்களின் பன்மடங்கிலான விலை யேற்றங்களினால் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் அபிருத்தி மற்றும் புனரமைப்பு வேலையினை முன்னெடுக்க முடியாத நிலையுள்ளதாக யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ கவலை தெரிவித்துள்ளார்.

இவ் விலையேற்றத்தின் போது சில வடிகால்களில் திருத்த வேலைகளினை மேற்கொண்டுவருவதாக அவர் கூறினார்.

இவ்வாண்டுக்குள் 100 வீடுகளுக்கு குழாய் மூலம் நீர் வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிவித்த அவர், தற்போது கையிருப்பிலுள்ள பொருட்களினைப் பயன்படுத்தி ஏற்கனவே குழாய்கள் மூலம் நீர் விநியோகிக்கப்படும் பகுதிகளினை அண்டியுள்ள வீடுகளுக்கு நீர் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ச-3)

## வெப்பத்தால் கடல் மட்டம் உயர்கிறது நூறு கோடி பேர் மூழ்கும் ஆபத்து

### விஞ்ஞானிகள் எச்சரிக்கை

விஞ்ஞான வளர்ச்சி, தொழிற்சாலைகளின் பெருக்கம் உட்பட பல்வேறு காரணங்களால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதுடன் வெப்ப நிலையும் அதிகரித்து வருகின்றது. அதிக வெப்பம் காரணமாக பனிமலைகள் உருகுவதுடன் கடல் நீர் மட்டமும் அதிகரித்து வருகின்றது.

இது குறித்து அமெரிக்காவின் சான்பிரான்ஸிஸ்கோவில் ஆய்வு நடத்திய விஞ்ஞானிகள் கூறியிருப்பதாவது. உலகின் மொத்த மக்கள் தொகையில் நூறு கோடிபேர் தாழ்வான பகுதிகளில் வசிக்கின்றார்கள்.

கடல் நீர் மட்டத்திலிருந்து நூறு அடிக்குக் கீழே இவர்களது பகுதிகள் உள்ளன. திடீரென 2004 ஆம் ஆண்[illegible] இந்தோனேசியாவில் ஏற்பட்ட சு[illegible]மி போன்று பேரலைகள் ஏற்பட்[illegible]லோ கடல் நீர் மட்டம் அதிகரித்தாலோ இந்தப் பகுதிகள் மூழ்கிவிடும்.

கடல் மட்டம் நூறு அடி உயர்ந்ததால் உலகம் முழுவதும் 37 இலட்சம் சதுர மைல் பரப்பு மூழ்கிவிடும். நூறு கோடி பேருக்கு இது ஆபத்தை ஏற்படுத்தும். கடல் நீர் 16 அடி உயரத்தலோ 66 கோடி பேர் பாதிக்கப்படுவார்கள். 20 இலட்சம் சதுரப்பரப்பளவு நிலம் மூழ்கிவிடும் தற்போதைக்கு ஆண்டு தோறும் கிட்டத்தட்ட எட்டு அங்குலம் கடல் மட்டம் உயர்ந்து வருகின்றது. 500 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட கடல் மட்டம் 20 மீற்றர் உயர்ந்துள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## உப அஞ்சல் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை உப அஞ்சல் அதிபர் சேவையின் உப அஞ்சல் அதிபர்களை தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான அறிவித்தல் எதிர்வரும் 27 ஆம் திகதி வெளியாகவுள்ள வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்படவுள்ளது.

குறிப்பட்ட உப அஞ்சல் அலுவலகங்களின் எல்லைக்குட்பட்டவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். யாழ்.மாவட்டத்தில் உப அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கக்கூடிய இடங்களையும் மேலதிக வர்த்தமானி அறிவித்தலையும் இன்று முதல் வலம்புரி அலுவலகத்தில் பார்வையிடலாம். (ச)

### வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (நீகோட்)

#### வேலைத்தள பொறியியலாளருக்கான பதவி வெற்றிடம்

நீகோட் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் வேலைத்தள பொறியியலாளருக்கான பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் கல்வித் தகைமைகள், தொழில் சார் தகைமைகள், பிறந்த திகதி மற்றும் வேண்டிய தகவல்களை அடங்கியதாக சுயவிபரப் பட்டியலைத் தயாரித்து 08.05.2007 ஆம் திகதிக்கு முன்பதாக பிரதித்திட்டப் பணிப்பாளர் நீகோட், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப் பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

பதவி - வேலைத்தள பொறியியலாளர்

தகைமை - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் B.Sc Civil Engineering பட்டம்

தெரிவு முறை- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரிகள் பதவிக்கு தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

க.கணேஷ்

அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.

(C-அ.58)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சந்திரகுமார் பிரேம்குமார்

(உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் தரம் -07)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 28 | 11 |
| 08 | 03 |
| 1995 | 2007 |

அன்பு மொழிகள் பல பேசி
ஆடிப் பாடி மகிழ்வித்தாய்
அன்று நிகழ்ந்த பஸ் விபத்தில்
இறைவனின் அடியை அடைந்துவிட்டாய்
என்றும் என்றும் எம் மனத்தில்
அழியா இடத்தைப் பெற்றவனே!
எங்கோ சென்ற உன் முகத்தை
இனிமேல் எப்போ நாம் காண்போம்?

கடந்த 11.03.2007 ஞாயிற்றுக் கிழமை சிவபதமெய்திய எமது அன்புச் செல்வம் பிறேம்குமாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், மதிய போசனமும் இன்று 24.04.2007 செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

-குடும்பத்தினர்


### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 29. ரோகிணி 3 ஆம் பாதம். செவ்வாய்க்குற்றமற்ற 9 பாவகிரகமுடைய Com.Eng ஆணுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.
விலாசம்:- விஜயகாந்தன், குளங்கரை ஒழுங்கை (ரெயில் றோட்), கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொலைபேசி:-0212229722 (c-019)






Kuband Full System Rs.10,000/= இல் இருந்து...

### NEW YEAR SALE

(ஏப்ரல் மாத முடிவு வரை)

சண்டீவி, சண்நியூஸ், ஜெயா டீவி, பொதிகை மற்றும் DD Sports, Headlines today, DD News உட்பட 44 சனல்களை DVD Quality உடன் கண்டு களிக்கக்கூடிய Ku band டிஸ் அன்ரனா சிஸ்டம் மற்றும் டிஸ் டீவி பக்கேஜ்கள், கேபிள் டீவி உபகரணங்கள் யாவும் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

எமது நிறுவனம் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (TRC) அனுமதி பெற்ற நிறுவனம்.

விபரங்களுக்கு:- SATS-TECH ENGINEERS
இல.182, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் (குளப்பிட்டி சேச் அருகில்)
Phone:- 021 222 5908 / 077 7710785

(C-022)


### கண்ணீர் அஞ்சலி



வலம்புரி-சங்குநாதம் எழுத்தாளர் அவைக் குழு உறுப்பினரும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவனுமாகிய இ.முரளீதரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**இராமலிங்கம் இராசசுந்தரம்**

(ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர், முன்னாள் பொது முகாமையாளர் பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்) அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரிக் குடும்பம்.

> தனக்கொன்றும் தெரியாவிட்டாலும் எல்லாம் அறிந்தவர் போல் நடிப்பவன் தான் அரசியல்வாதி.
>
> -பெர்னாட்ஷா

வலம்புரி

## சமாதானக் கதவை ஜனாதிபதி திறக்கிறார் பிரதமரோ பூட்டுகிறார்

சமாதானக் கதவு திறந்தே இருக்கிறது என்கிறார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவோ அடுத்து வரும் சில தினங்களில் வடக்கில் தாக்குதல் நடத்தப்படுமெனக் கூறி சமாதானக் கதவை பூட்டுகிறார். எப்படி இருக்கிறது நிலைமை.

ஒரு அரசாங்கம் அதில் இரண்டு முக்கிய பதவிகளில் இருப்பவர்கள் எதிரும் புதிருமாக கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.

தெரிவிக்கின்ற கருத்துக்கள் சாதாரணமானவையல்ல. இந்த நாட்டில் மனித வர்க்கம் வாழ்வதோடு தொடர்பு பட்டதாகும். யுத்தத்தினால் மக்கள் நிலைகுலைந்து போயுள்ளனர்.

மட்டக்களப்பில் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருப்பதற்கு இடமின்றித் தவிக்கின்றனர். நிலைமை இவ்வாறாக இருக்கும் போது இன்னும் சில தினங்களில் வட பகுதியில் தாக்குதல் நடத்தப்படுமென ஒரு நாட்டின் பிரதமர் பகிரங்கமாக கூறுகின்றார் எனில் அவரிடம் புதைந்திருக்கக்கூடிய இனவாதம் எத்துணை பயங்கரமானதென்பதை புரிந்து கொள்ள முடியும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமாதானக் கதவு திறந்தே இருப்பதாகக் கூறி 24 மணித்தியாலங்கள் கடப்பதற்குள், வடக்கில் தாக்குதல் நடத்தவுள்ளோம் என பிரதமர் கூறுவாராயின். அது ஜனாதிபதியின் அனுமதியை பெறாமல் கூறப்பட்டதாக எடுத்துக்கொள்ள முடியாது.

எனவே சர்வதேச சமூகத்தை சமாளிக்கும் வகையில் ஒருவரும் பேரினவாத சிந்தனையுடைவர்களை தூண்டி தமிழ் மக்களின் வாழ்விடங்களில் யுத்தத்தை நடத்தி அவர்களை அழிப்பதில் இன்னொருவருமாக பிரசாரம் செய்வது இரட்டை வேடத்தின் வெளிப்பாடாகும்.

இலங்கையில் சமாதானத்தை செயற்படுத்துவதே பிரச்சினைக்கான தீர்வாக இருக்க முடியுமென புனித பாப்பரசர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் எடுத்துக் கூறியிருந்தார்.

புனித பாப்பரசரின் போதனை செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கும் போதே வட பகுதியில் தாக்குதலை நடத்த உள்ளோம் என பிரதமர் கூறுவதானது புனித பாப்பரசரை அவமதிக்கும் செயலாகும்.

கோடிக்கணக்கான கத்தோலிக்க மக்களின் ஆன்மிகத் தலைவராக இருக்கக்கூடிய புனித பாப்பசரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்ததானது மதிப்பும் மரியாதையும் கொண்டமைந்ததாக இருக்குமாயின் பாப்பரசரின் போதனைகளை ஏற்று நடப்பதும் இதன் பாற்பட்டதாக இருக்கும். ஆனால் பாப்பரசரின் யோசனைகளுக்கு பிரதமரின் அறிவிப்பு மதிப்புக்கொடுப்பதாக தெரிய வில்லை.

# விடுதலைப்புலிகளின் உத்தரவாதங்களை நம்புவதற்கு அரசு தயாராக இல்லை

## அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான பேச்சுவார்த்தை தொடர்பாக விடுதலைப்புலிகளின் உத்தரவாதங்களை நம்புவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை என்று பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். சமாதான செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அவர் மேலும் தெரிவித்ததாவது;

புனித பாப்பரசரின் கோரிக்கையை அரசாங்கம் ஏற்கின்றது. காரணம் பாப்பரசரின் கோரிக்கைக்கும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கும் இடையில் வித்தியாசங்கள் இல்லை. இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.

பேச்சுவார்த்தைக்கான கதவினை அரசாங்கம் திறந்தே வைத்துள்ளது. ஆனால் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு முன்னர் சில விடயங்களை விடுதலைப்புலிகள் செயற்பாட்டு ரீதியில் வெளிக்காட்டவேண்டும்.

அதாவது தற்போதைய நிலைமையில் விடுதலைப்புலிகளின் எந்தவிதமான உத்தரவாதங்களையும் ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயார் இல்லை. விடுதலைப்புலிகளின் உத்தரவாதத்தை நம்ப முடியாது. விடுதலைப்புலிகள் சமாதானம் மீதான அர்ப்பணிப்பை செயற்பாட்டு ரீதியாக வெளிக்காட்ட வேண்டும். வன்முறைகளை கைவிட வேண்டும். விடுதலைப் புலிகள் செயற்பாட்டு ரீதியில் வன்முறைகளை கைவிடும் வரை பேச்சுவார்த்தைக்கான சாத்தியங்கள் குறைவு என்பதனை கூறவேண்டும்.

சமாதான பேச்சிலிருந்து அரசாங்கம் ஒரு போதும் விலகவில்லை. விடுதலைப்புலிகளே பேச்சு மேசையிலிருந்து எழுந்து சென்றனர். எனவே பேச்சுக்கான சமிக்ஞை விடுதலைப்புலிகள் பக்கம் இருந்தே விடுக்கப்பட வேண்டும். விடுதலைப்புலிகள், இராணுவத் தளபதி மீது தாக்குதல் நடத்தும் வரை அரசாங்கம் ஒரு துப்பாக்கி ரவையையும் பயன்படுத்தவில்லை என்பதனை யாரும் மறந்துவிடக்கூடாது.

நாட்டின் தேசிய பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. இந்த விடயத்தில் அரசாங்கத்தினால் நெகிழ்வுப்போக்கை கடைப்பிடிக்க முடியாது. தேசிய பாதுகாப்புக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் தொடர்ந்தும் மேற்கொள்ளும்.

இதேவேளை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை அரசாங்கத்திடம் விளக்கம் கோரினால் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றோம். அதில் எந்தவிதமான சிக்கல்களும் இல்லை. நாட்டில் மனித உரிமைகள் மீறப்படாதிருக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும். மனித உரிமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை விளக்கம் கோரினால் அதற்கு பதிலளிக்க அரசாங்கம் தயார் என்பதனை அறிவிக்கின்றேன் என்றார் அவர். (ச-5)

## யாழ்.நகரை அண்மித்த பகுதியில் நேற்றுப் பாரிய சுற்றிவளைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் நேற்றுக் காலை 5 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாவலர் வீதி,கே.கே.எஸ்.வீதி, இராமநாதன் வீதி,பலாலி வீதி உள்ளிட்ட வீதிகளில் நேற்று அதிகாலை பெருமளவான இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு வீடுவீடாக சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இச் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில் பஸ் போக்குவரத்து பல மணித்தியாலங்கள் ஸ்தம்பிதமடைந்தன பாடசாலைகள் நேற்று இரண்டாம் தவணை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து ஸ்தம்பித்ததினால் பல மணித்தியாலங்கள் வீதிகளில் பஸ் வண்டிகளை எதிர்பார்த்து ஏமாற்றத்துடன் பாடசாலை செல்லாது வீடு திரும்பினர்.

இதேவேளை அரச உத்தியோகஸ்தர்களும் கடமைக்கு உரிய நேரத்திற்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அப் பகுதிகளில் வீதியில் பயணித்த அனைவரும் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னர் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். இதேவேளை அரியாலை, கச்சேரி, நல்லூர் ஆகிய பகுதிகளிலும் தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.(எ-3)

## நாகர்கோயில் பகுதியில் கிபீர் தாக்குதல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அடையாளம் காணப்பட்ட இலக்குகள் மீது விமானப்படையினர் நேற்றுத் தாக்குதல் நடத்தியுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக தகவல் மையம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு, நாகர் கோயில் பிரதேசத்தில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் கடற்படையை முகாம்கள் மீது நேற்று நண்பகல் 12 மணியளவில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு குடும்பி மலைக்கு மேற்காகவுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் ஒன்று கூடும் இடம் ஒன்றை குறிவைத்து பிற்பகல் ஒரு மணியளவில் விமானக்குண்டு வீச்சு நடாத்தப்பட்டதாகவும் தகவல் மையம் அறிவித்துள்ளது. (ச-3)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாள்களுக்கு விலங்குவிசர் நோய் தடுப்பூசி கட்டம் கட்டமாக வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகரச சபை சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.

இன்று காலை 8.30 மணிக்கு நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்திலும் 11 மணிக்கு நல்லூர் முருகன் சனசமூக நிலையத்திலும் 2 மணிக்கு நல்லூர் வன்னியசிங்கம் பொதுப் பணிமன்றத்திலும் வளர்ப்பு நாள்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு அரசடி சக்தி சனசமூக நிலையத்திலும் 11 மணிக்கு சு.வை.பணிமனை திருநெல்வேலி சிவன் கோவிலடியிலும், 2 மணிக்கு கொண்டலடி சனசமூக நிலையத்திலும் 27 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வண்ணார் பண்ணை கீரிப்பிள்ளையார் கோவிலடி ஆரம்ப சுகாதார நிலையத்திலும் 11 மணிக்கு வண்ணார் பண்ணை பொன்னப்பாலேன் பகுதியிலும், 2 மணிக்கு ஓட்டுமடம் வீதியிலும் வளர்ப்பு நாள்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (ச-5)

## பேச்சுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலகளாவிய கல்வி அபிவிருத்தி வாரத்தை ஒட்டி கல்வி அபிவிருத்திக்கான கூட்டமைப்பின் ஆதரவில் நடாத்தப்படும் பேச்சுப் போட்டி இன்று காலை 10.30 மணிக்கு கோவில் வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் நடைபெறும்.

விண்ணப்பித்த மாணவர்களை தவறாது சமுகமளிக்குமாறு கல்வி அபிவிருத்திக்கான கூட்டமைப்பின் பிரதித் த்லைவர் வி.ஸ்ரீ. சக்திவேல் அறிவித்துள்ளார். (ச-116)

## யாழ்.பல்கலைக்கழக பெறுபேறு வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் 2005 ஆம் கல்வியாண்டின் கலைப்பிவு 2ஆம் ஆண்டுக்கான 2ஆம் அரையாண்டு பெறுபேறுகளும் இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் 2005 ஆம் ஆண்டு முதலாம் ஆண்டுக்கான 2 ஆம் அரையாண்டு பெறுபேறுகளும் நேற்று வெளியாகியுள்ளது. (ச-3)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற் கழகத்தினால் நாளை காலை 10 மணிக்கு புவியியல் துறை மண்டபத்தில் கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளது.

Homo Sapiens-Human Animal-(Phy Logeny) என்ற தலைப்பில் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் இக் கருத்தரங்கில் உரையாற்றவுள்ளார். (ச)

# நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் உணவுப் பண்டங்கள் விற்பனை

## யாழ்.வணிகர் கழகம் அறிவிப்பு

வணிகர் கழகப் பணிமனையில் கடந்த 21 ஆம் திகதி யாழ்.உணவகங்களின் உரிமையாளர்களுடன் நடந்த கலந்துரையாடலில் தற்போது குடாநாட்டில் பொருட்களின் விலை நிலைமைக்கு ஏற்ப தேநீர் உட்பட சில உணவுப் பண்டங்களுக்கான ஆகக்கூடிய விற்பனை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

நிர்ணயம் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களுக்கான விலையில் விற்பனை செய்யப்படவேண்டுமென யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. யாழ்.அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய வாடிக்கையாளரின் நன்மை கருதி உணவுப் பண்டங்களின் விலைப்பட்டியலை வாடிக்கையாளரின் பார்வைக்கு வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

நிர்ணயிக்கப்பட்ட விலை விபரங்கள் வருமாறு, தேநீர் 6 ரூபா, பால் தேநீர் 14 ரூபா, உழுந்துவடை (சாதாரணம்) 10 ரூபா, உழுந்துவடை (பெரியது) 12 ரூபா, கடலை வடை 12 ரூபா, வாய்ப்பன் 10 ரூபா, றோல் (உருளைக்கிழங்கு போட்டது) 15 ரூபா, றொட்டி (தனிறொட்டி) 7 ரூபா, றொட்டி (சம்பல், சாம்பாருடன்) 8 ரூபா, இடியப்பம் 3 ரூபா, இட்டலி (பெரியது) 8 ரூபா, இட்டலி (சிறியது) 6 ரூபா, மரக்கறிச்சாப்பாடு (அரைச்சாப்பாடு) 40 ரூபா, மரக்கறிச்சாப்பாடு (முழுச் சாப்பாடு) 60 ரூபா. (ச)

# ஜெயலலிதாவுக்கு அச்சுறுத்தல் விடுதலைப்புலிகள் கண்டனம்

(கிளிநொச்சி)

தமிழ்நாடு முன்னாள் முதல்வரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளருமான ஜெ.ஜெயலலிதாவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமைக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது, முன்னாள் தமிழக முதல்வருக்கு விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, தமிழ்நாடு அல்லது உலகின் எந்த ஒரு நாட்டினது உள்விவகாரங்களிலும் தலையிடாது ஒதுங்கியிருக்கும் கொள்கையைத் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ந்து கடைபிடித்து வருகின்றனர்.

விடுதலைப் போராட்ட இயக்கமாகிய நாம், எம்மை ஒடுக்கும் அரசாங்கமான இலங்கை அரசாங்கத்தின் கீழ்த்தரமான பரப்புரைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றோம்.

ஒடுக்கப்படுகின்ற ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் கரிசனையான நிலைமையைக் கட்டுப்படுத்தி விடலாம் என்றும் அரசாங்கம் கருதுகின்றது.

இலங்கை அரசாங்கத்தால் இயக்கப்படும் சில சக்திகளால்தான் தமிழ்நாட்டில் சில முக்கிய தலைவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டுள்ளதாக நாம் நம்புகின்றோம்.

இத்தகைய முறைகேடான செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். தமிழ் நாட்டு அரசியலில் எமது பெயரால் மேற்கொள்ளப்படும் இத்தகைய முயற்சிகள் குறித்து அவதானமாக இருக்குமாறு நாம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தனிநபர்களும் ஊடகங்களும் இத்தகைய அநாமதேய கடிதங்களைப் பொருட்படுத்த வேண்டாம் என்றும் நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம் என்றார் இளந்திரையன். (ச-5)

## ஏழு தினங்களுக்கு மதுபானசாலை பூட்டு

(கொழும்பு)

வெசாக் தினத்தை முன்னிட்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதிமுதல் மே மாதம் 4 ஆம் திகதி வரை சகல மது விற்பனை நிலையங்களும் மூடப்படும் என கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் இதனை வெசாக் தினங்களில் மீறினால் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென உள் விவகார ஆணையாளர் பண்டார எக்க நாயக்க தெரிவித்துள்ளார். (ச-5)

# யாழில் தற்கொலை வெடிகுண்டு...

சரிவந்ததுடன் அவர்கள் தங்கள் குண்டுகளை வெடிக்கவைத்து எதிரியை அழித்த சம்பவங்களை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

பல சம்பவங்களை நாம் கேள்விப்படவில்லை. அந்த வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அவ்வாறான சம்பவங்களும் நடைபெற்றிருக்கின்றன. கரும்புலித் தாக்குதல்களும் நடைபெற்றிருக்கின்றன. வெடி மருந்து அங்கியை வெடிக்கவைத்து கரும்புலிகளாக தங்களை ஆக்கிக் கொண்டு எதிரியை அழித்த சம்பவங்களும் ஏராளமாக உண்டு.

தற்போது தற்காப்பு வெடிகுண்டு அங்கித் தாக்குதல் நடைபெறுகின்றது. தற்காப்பு வெடிகுண்டு அங்கியை அணிதல் என்பது கரும்புலிக்கு ஒப்பானது அல்ல. ஆனால் எதிரியிடம் பிடிபடக் கூடாது என்பதற்காக சயனைட் குப்பியைக் கடித்து எதிரிக்கு இழப்பில்லாமல் சாகிற சாவை விடவும் ஒருபெறுமதியான சாவாக மாற்றி ஒரு பாரிய வரலாற்று நிகழ்வாக இந்தத் தற்காப்புவெடிகுண்டு அங்கி அறிமுகமாகியிருக்கின்றது.

உயிருடன்எதிரியிடம் பிடிப்பட்டுவிட்டால் தன்னுடன் சேர்ந்து சங்கிலித் தொடராக இருக்கின்ற ஆதரவாளர்கள்,போராளிகள் எனப் பாரிய இழப்புக்கள் ஏற்படும். அப்படியான இழப்புக்கள் கடந்த காலத்தில் நடைபெற்றிருக்கின்றன. இந்த இழப்புக்களைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக தற்காப்பு வெடிகுண்டு அங்கியை அணிந்து கொள்வதற்கு அவர்கள் தயாராகவிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருக்கின்ற ஒவ்வொரு போராளிகளும் அங்கியைக் கட்டிக் கொண்டு இருக்கின்ற போராளிகளாகத்தான் இருக்கின்றார். அங்கு எத்தனை ஆயிரம் போராளிகள் இருக்கின்றனர் என்று எனக்குத் தெரியாது.

அங்கு எத்தனை ஆயிரம் போராளிகள் தற்காப்பு அங்கியுடன் இருக்கின்றனர் என்று இங்கிருந்து வழியனுப்பியவர்களுக்கும் அங்கு நிற்பவர்களுக்கும்தான் தெரியும். தற்காப்பு அங்கியை இரவு - பகலாக கட்டிக் கொண்டும் துப்பாக்கியைக் கையில் ஏந்திக் கொண்டும் இரவு - பகலாக விழித்துக் கொண்டும் கடமையைச் செய்கின்ற போராளிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டிருக்கின்றனர் என்றார் அவர். (ச)

# நோர்வேத்...

முறைப்படுத்துதல் என்ற அடிப்படையில் பேசலாம் என விடுதலைப்புலிகள் தெரிவித்து வரும் நிலையில் அதனை அதிகாரபூர்வமாக நோர்வேத் தரப்பிடம் விடுதலைப்புலிகள் தெரிவித்தால், நிலைமைகள் அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்பட்டு விடலாம் என்ற வகையிலேயே இந்தப் பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் என்ற ஆலோசனை அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்றுக் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப்புலிகளுடன் பேசவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து...

விரும்பவில்லை.

உடன்பாட்டின்படி 14 நாள் முன்னறிவித் தலை கொடுத்து விட்டு விலகிவிடலாம். ஆனால் அது அனைத்துலக ரீதியில் தங்களுக்குப் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுமெனக் கருதும் அரசாங்கம், அதனை மக்களைக் கொண்டு இரத்துச் செய்ய விரும்புகின்றது என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்நிறுத்த உடன்பாடானது மக்கள் வாக்கெடுப்பின் மூலம் தோற்கடிக்கப்பட்டால் அது சமாதான முயற்சிகளை முழுமையாக நிராகரிக்கும் செயல் என்பதுடன் வடக்குக் கிழக்கில் முழு அளவிலான போருக்கு அரசாங்கத்துக்குக் கிடைக்கும் மக்கள் அங்கீகாரமாகவே கருதப்படும் ரீதியில் இதனை நியாயப்படுத்த அரசாங்கமும் முயலும்.

போர்நிறுத்த உடன்பாட்டை நிராகரித்து போருக்கு அங்கீகாரம் வழங்கும் தென்னிலங்கை மக்களின் செயலானது வடக்குக் கிழக்கில் மட்டும் போர் நடைபெற வேண்டும் என்பதை அங்கீகரிப்பதாக இருக்கும். அது முழு நாட்டிற்கும் உரியதாகவிருக்கும் என்பதை அவர்கள் உணர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# மீன்பிடித்...

கடற்பரப்பில் குறிப்பிட்ட அளவிலான மீனவர்களே தொழிலினை மேற்கொள்வதற்குப் படைத் தரப்பினால் அனுமதிக்கப்பட்டனர்.

பல்வேறு கஷ்ட நிலையிலும் தொழினை மேற்கொண்டு வந்த போதிலும் தற்போது முற்றாகத் தடை விதிக்கப்பட்டதனால் அன்றாடம் வருமானத்தைப் பெற்று தமது ஜீவனோபாயத்தினை மேற்கொண்ட மக்கள் வறுமை நிலைக்குள்ளாகியுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ச-3)

# பயங்கர...

இக் குழுக்கள் பயங்கரவாதிகளாக நீடிக்கப்படுவதற்கான காரணத்தை அக்குழுக்களால் எதிர்வரும் 30 நாள்களில் வினவும் பட்சத்தில் அதற்குரிய உத்தியோகபூர்வ காரணத்தை வெளியிடப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் சமுகமளித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் 25 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் ஏகோபித்த முறையில் தமது வாக்குகளை அளித்துள்ளனர். (ச-3)

# பல்கலைக்கழக கல்விசாரா...

பல்கலைக்கழகங்களின் போதனை சாரா ஊழியர்கள் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்திலும் இவ் வேலை நிறுத்தம் இடம்பெறும். பாதுகாப்பு மற்றும் நீர்வழங்கல்- ஊழியர்களும் மாணவர்களுக்கான வாகன சேவை சாரதி மற்றும் மாணவர் விடுதியின் சில பணியாளர்களுக்கும் இவ்வேலை நிறுத்தத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாணவர்களின் விரிவுரைகள் மற்றும் திட்டமிடப்பட்டிருந்த பரீட்சைகள் தடைப்படாமல் இருக்க தொண்டர் அடிப்படையிலான ஊழியர் சேவையை வழங்க யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் முன்வந்துள்ளது.

கடந்த ஒரு வருட காலமாக தடைப்பட்டிருந்த யாழ்.பல்கலைக் கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மேலும் தடைப்படாதிருத்தல் பொருட்டே இம்முறை இவ் விசேட நடைமுறைக்கு ஊழியர் சங்கப் பொதுச்சபை ஒப்புதல் அளித்துள்ளது என ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச-3)

# இலங்கை இராணுவத்தினருக்கு...

நேற்று நடந்த சட்டசபை விவாதத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் கோ.க.மணி பேசுகையில்,

இராணுவத் தளபாடங்களை இலங்கைக்கு மத்திய அரசு கொடுப்பதாக வந்துள்ள செய்தி நமக்கு அதிர்ச்சி அளிக்கிறது. அங்கு முப்படைத் தாக்குதல் நடக்கின்றது. தமிழர் வீடுகளுக்குச்சென்று கணவன் கண் முன்பு மனைவியை இலங்கை இராணுவத்தினர் கற்பழிக்கின்றார்கள். அங்கே சோகமான சம்பவங்கள் நடைபெறுகின்றன.

அங்குள்ள தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இலங்கையில் சமரச தீர்வு வர வேண்டும் என்று போப் ஆண்டவர் உட்பட பலர் சொல்கின்றார்கள்.

இந்தச் சூழ்நிலையில் இராணுவ உதவியை மத்திய அரசு வழங்காமல் இருக்க முதலமைச்சர் வலியுறுத்த வேண்டும் என்றார்.

இந் நிலையில் கோ.க.மணி பேசியதும் காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்தனர். பதிலுக்கு பா.ம.க வினரும் எழுந்து நின்று தாங்கள் பேசுவது சரிதான் என்று குரல் கொடுத்தனர். இதனால் அவையில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. இரு தரப்பினரையும் சபாநாயகர் அமைதிப்படுத்தினார்.

அதன் பின்னர் கலைஞர் கருணாநிதி உரையாற்றினார். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும் காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் இந்த அவையில் பதிவாகியிருக்கின்றன.

அதேநேரத்தில் இந்தப் பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் பத்திரிகைகளிலே வந்த கருத்துக்கள். அந்த கருத்துக்களின் அடிப்படையிலேதான் இங்கே நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் இங்கே உரையாற்றியிருக்கின்றார்கள்.

பத்திரிகையிலே வந்த இந்தக் கருத்துக்கள், செய்திகள் உண்மையானவை தானா என்பதனை அறிந்து கொள்ள வேண்டியது மிகமிக முக்கியம். என்ன செய்தி வந்திருக்கின்றதென்றால் இலங்கைக்கு போர்க் கருவிகளை வழங்குவதில்லை என்ற முடிவுக்கு மாறாக இந்திய அரசு தற்போது ஆயுதங்களை வழங்கியுள்ளது என்ற செய்தி வந்திருக்கின்றது.

ஆனால் இது உண்மைதானா என்பதனை அறிந்துகொள்ள வேண்டிய அந்த வாய்ப்பை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அந்த வாய்ப்பு நமக்குக் கிடைத்தது உண்மைதான் என்றால் நாம் மத்திய அரசுக்கு இதிலே இன்னும் ஒற்றுமையோடு இருந்து நம்முடைய அழுத்தமான வேண்டுகோளை விடுப்பதற்குத் தயாராக இருக்கின்றோம்.

நீங்கள் தமிழர்களை வதைக்க அது பயன்படும். ஆகவே அந்தச் செயலைக் கண்டிப்பாக நிறுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கின்ற உரிமை நமக்கு இருக்கின்றது.

பொறுப்பும் நமக்குஇருக்கின்றது என்று மாத்திரம் சொல்லி இந்த அவையில் அமைகின்றேன் என்றார் முதலமைச்சர் கருணாநிதி. (ச-5)


VACANCY

INSTRUCTOR FOR RADIO & T.V. REPAIRING

வானொலி,தொலைக்காட்சி திருத்துதல் போதனாசிரியருக்கான விண்ணப்பம்

மேற்படி பதவிக்கு தகைமை உள்ளவர்கள் சான்றிதழ்களுடன் 27/04/2007 க்கு முன்னர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு:-

REGISTRAR
PATRICIAN INSTITUTES
59, ST.PATRICKS ROAD,
JAFFNA.
T.P.-222 6148

(c-அ-057)


# மரண அறிவித்தல்கள்

## தம்பிஐயா ஆறுமுகம்



(ஓய்வு பெற்ற ரெலிக்கொம், தொழில் நுட்ப உத்தியோகஸ்தரும், பிரபல மின் மெக்கானிக்கும்)

புதிய செங்குந்தா வீதியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் ராஜ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா ஆறுமுகம் 23.04.2007 திங்கட்கிழமை (நேற்று) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா-கனகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி-பவளம் தம்பதிகளின் அருமை மருமகனும், அன்னலெட்சுமி (பதுமா)யின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரன் (ஹொலன்ட்), மலர்விழி(நோர்வே), லதா (லண்டன்)ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகராசா (ஓய்வு பெற்ற அதிபர்) திருமதி தவமணி-கமலராசா(அதிபர், யாழ்.கல்வியங்காடு, இ.த.க.பாடசாலை), பரமானந்தம்(ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர்-நல்லூர் பிரதேச செயலகம்), திருமதி கமலாதேவி-ஸ்ரீரங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும்,

கு.சண்முகநாதன்(பொன்மணி)(S.C.F, திருகோணமலை), கு.கதிர்காமநாதன் J.P.(சின்னமணி) (யாழ்ப்பாணம், மாநகராட்சி மன்றம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அருணா, கேதீஸ்வரன், வெற்றிச்செழியன், ஆகியோரின் அன்பு மாமனாரும், திவ்வியா(ஹொலன்ட்), மீரா, துளசி(நோர்வே), சந்தோஷ் (லண்டன்)ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (24.04.2007) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

6, ராஜ வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்
கு.கதிர்காமநாதன் J.P.
மைத்துனர்.

(c-026)

## இராமலிங்கம் இராசசுந்தரம்

(ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகரும், முன்னாள் பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கப் பொது முகாமையாளரும், முன்னாள் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைத் தலைவரும்)



மாதகலைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இராசசுந்தரம் அவர்கள் 22.04.2007 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் (பென்சனியர்), இராமலிங்கம் - பொன்ம்மா தம்பதியினரின் ஏகபுத்திரன் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.04.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் தற்போதைய கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயா னத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

34,குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில்.

தகவல்:
இ.முரளீதரன் (மகன்)
(26 ஆம் அணி,
யாழ்.மருத்துவபீடம்)

(c-027)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.